Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I. TIRUPATTUR
Case No C.C.NO.64/2023
DEPOSITION OF PROSECUTION SIDE EVIDENCE No.2, Page.No.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | காயத்ரி | ஜாதி | |
| தந்தை/கணவர் பெயர் | ராதாகிருஷ்ணன் | தொழில் | இல்லத்தரசி |
| கிராமம் | அடியத்தூர் | மதம் | இந்து |
| மாவட்டம் | திருப்பத்தூர் | வயது | 31 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 ) on the 30th day of October 2023.

**சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.**

**முதல் விசாரணை.-** (எதிரி சந்தரசேகர் ஆஜரில் உள்ளார்)

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் இல்லத்தரசியாக உள்ளேன். ஆஜர் எதிரியை தெரியும். அ.சா.1 எனது கணவர் ஆவார். கடந்த 18.04.2021 அன்று மாலை சுமார் 6.00 மணியளவில் எனது நிலத்திற்கு அருகே பொது நீரேடை உள்ளது. அதை பெங்களூரை சேர்ந்த ரஜினி என்பவர் ஆக்கிரமிப்பு செய்து அந்த இடத்தில் மண்ணை கொட்டி ஜே.சி.பி இயந்திரம் மூலம் சமப்படுத்திக் கொண்டிருந்தார். இதை கேள்விபட்டு சம்பவயிடத்திற்கு நானும், எனது மாமியார் நாகரத்தினம் என்பவரும் சென்று, ஜே.சிபி இயந்திரத்தை இயக்கிக்கொண்டிருந்த நபரிடம் இந்த நிலம் தொடர்பாக வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றும், இந்த சமயத்தில் ஏன் இது போன்ற செயலை செய்கிறீர்கள் என்று நாங்கள் கேட்டோம். அப்போது அருகில் இருந்த ஆஜர் எதிரியும், அவருடன் இருந்த மற்றொரு நபரும் வேலையை தொடருமாறும், நாங்கள் பார்த்துக்கொள்கிறோம் என்று ஜேசிபி ஓட்டுநரிடம் தெரிவித்தார்கள். மீண்டும் நாங்கள் தடுத்தபோது ஆஜர் எதிரி எங்களை பார்த்து தேவிடியா என்று அசிங்கமாக திட்டினார். அங்கிருந்த எனது கணவர் ஆஜர் எதிரியிடம் ஏன் இதுபோன்று அசிங்கமாக பேசுகிறாய் என்று கேட்டார். அதற்கு ஆஜர் எதிரி நான் அப்படி தான் பேசுவேன் உன்னால் என்ன செய்ய முடியும் செய்துக்கொள் என்று கூறிக்கொண்டே கையால் எனது கணவரின் தாடை மீது குத்தினார். அதனால் எனது கணவர் மயக்கம் ஆகி கீழே விழுந்துவிட்டார். பின்பு எனது கணவருக்கு வாயிலிருந்து இரத்தம் வந்தது. பின்பு காயம்பட்ட எனது கணவரை மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்ப்பதற்காக அருகில் உள்ள நிலத்திலிருந்து நபர்களை அழைத்து எனது கணவரை மருத்துவமனைக்கு தூக்கி செல்லும்போது ஆஜர் எதிரி எங்களை பார்த்து கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டினார். பின்பு எனது கணவரை அரசு

மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தோம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**.

நான் முதல் விசாரணையில் சொன்ன விவரத்தை தான் போலிசாரிடம் சொன்னேன் என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொன்ன வழக்கு எண் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. போலிசாரிடம் மேற்கண்ட வழக்கின் நகல்களை கொடுத்துள்ளோமா என்றால் இல்லை, ஆனால் காண்பித்துள்ளோம். போலிசார் விசாரிக்கும்போது நாங்கள் அனைவரும் ஒன்றாக சென்றோம் என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். சம்பவயிடத்திற்கு முதலில் நான் தான் சென்றேன் என்றால் சரிதான். எனது மாமியார் கிளம்பியஉடனே நானும் வீட்டை பூட்டிவிட்டு கிளம்பிவிட்டேன். நாங்கள் சம்பவயிடம் சென்ற 5 நிமிடத்தில் எனது கணவர் வந்துவிட்டார். சம்பவயிடத்தில் சுமார் 20 நபர்கள் இருந்திருப்பார்கள். நான் வழக்கிற்காக எதிரி எங்களை அசிங்கமாக திட்டியதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நாங்கள் ஜேசிபி ஒட்டுநரை தான் கேட்டோம் என்று போலிஸ் விசாரணையில் சொல்லியுள்ளோமா என்றால் இல்லை. போலிசார் என்னை 3 நாட்கள் கழித்து எனது வீட்டிடம் வைத்து விசாரித்தார்கள். எனது கணவர் கையொப்பம் செய்த தாளில் என்ன எழுதியிருந்தது என்று நான் படித்து பார்க்கவில்லை. மற்ற சாட்சிகளை எப்போது விசாரித்தார்கள் என்று எனக்கு தெரியாது. என் கணவர் கீழே விழுந்து காயம் ஏற்படுத்திக்கொண்டார் என்றும், எதிரியால் எந்த காயமும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. எதிரி எங்களுக்கு எந்தவித கொலை மிரட்டலும் விடவில்லை என்றால் சரியல்ல. எங்களுக்கும், எதிரிக்கும் பேச்சு வார்த்தை இல்லை என்றால் சரிதான். என் கணவருக்கும் எதிரிக்கும் இருக்கும் நில சம்மந்தமான பிரச்சனை சரி செய்து கொள்வற்கான பொய்யாக என் கணவர் புகார் கொடுத்துள்ளார் என்றும் அதற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்றால் சரியல்ல. நான் புகாரில் சொல்லியுள்ள அனைத்து சங்கதிகளும் தவறானது என்றால் சரியல்ல.

Signature of Witness

DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I. TIRUPATTUR
Case No C.C.NO.64/2023
DEPOSITION OF PROSECUTION SIDE EVIDENCE No.1, Page.No.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ராதாகிருஷ்ணன் | ஜாதி | |
| தந்தை/கணவர் பெயர் | வேலு | தொழில் | இரும்பு கடை |
| கிராமம் | அடியத்தூர் | மதம் | இந்து |
| மாவட்டம் | திருப்பத்தூர் | வயது | 44 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 ) on the 30th day of October 2023.

**சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.**

**முதல் விசாரணை.-** (எதிரி சந்தரசேகர் ஆஜரில் உள்ளார்)

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் இரும்பு கடை வைத்துள்ளேன். ஆஜர் எதிரியை தெரியும். கடந்த 18.04.2021 அன்று மாலை சுமார் 6.00 மணியளவில் எனது நிலத்திற்கு அருகே பொது நீரேடை உள்ளது. அதை பெங்களூரை சேர்ந்த ரஜினி என்பவர் ஆக்கிரமிப்பு செய்து அந்த இடத்தில் மண்ணை கொட்டி ஜே.சி.பி இயந்திரம் மூலம் சமப்படுத்திக் கொண்டிருந்தார். அதை பார்த்த எனது அம்மா நாகரத்தினம் என்பவர் ரஜினி என்பவரிடம் கேட்டுள்ளார். இத்தகவலை கேள்விப்பட்டு நானும் சம்பவயிடத்திற்கு சென்றேன். அப்போது ரஜினி என்பவருடன் இருந்த ஆஜர் எதிரி சந்திரசேகர் என்பவர் எனது அம்மாவை பார்த்து தேவிடியா என்று அசிங்கமாக திட்டினார். இதை எதிரி சந்தரசேகரிடம் ஏன் எனது அம்மாவை அசிங்கமாக திட்டுகிறாய் என்று கேட்டேன். அதற்கு எதிரி சந்திரசேகர் என்பவர் இந்த ஓடை தொடர்பாக உயர் நீதிமன்ற உத்தரவு தன்னிடம் உள்ளது என்றும், அது குறித்து நீங்கள் ஏன் கேள்வி எழுப்பிகிறீர்கள் என்று என்னிடம் கூறினார். உடனடியாக எதிரி சந்திரசேகர் தனது கையால் எனது வலது பக்க தாடையில் ஓங்கி குத்தியதால் எனது வாயிலிருந்து ஒரு பல் விழுந்துவிட்டது. இதனால் நான் மயக்கம் ஆகி கீழே விழுந்துவிட்டேன். பின்பு எனது மனைவி மற்றும் தெரிந்த நபர் என்னை அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தார்கள். பின்பு மருத்துவமனையில் நான் சிசிக்சையிலிருந்தபோது போலிசார் என்னை விசாரித்தார்கள். அவர்களிடம் நடந்த விவரங்களை கூறினேன். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலம் தான் போலிசாரிடம் நான் கொடுத்தாகும். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ–1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**.

மண் நிரப்பியதாக சொல்லப்படும் விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல. போலிஸ் விசாரணையில் நான் தகவல் தெரிந்து வந்ததாக தான் கூறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். நான் சென்றபோது சுமார் மாலை 6.00 மணி இருக்கும். சம்பவம் 5.30 மணியிலிருந்து நடந்துக்கொண்டிருந்ததாக எனது அம்மா சொன்னார். எனக்கும், எதிரிக்கும் நிலம் சம்மந்தமாக முன் விரோதம் இருந்தது என்றால் சரியல்ல. எதிரி என் தாயாரை அசிங்கமாக திட்டியதாக சொல்லப்படும் விவரம் என் தாயார் சொல்லிதான் தெரியும் என்றால் சரியல்ல. நான் நேரடியாக பார்த்தேன். போலிஸ் விசாரணையிலும் நான் சம்பவயிடம் சென்று எதிரியிடம் ஏன் என் அம்மாவை அசிங்கமாக திட்டினாய் என்று கேட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். என் முன்னிலையில் எதிரி என் தாயரை திட்டியதாக புகாரிலும் முதல் விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லபடும் சமயத்தில் சுமார் 20 நபர்கள் இருந்தார்கள். போலிசார் 18.04.2021 அன்று இரவு சுமார் 10.00 மணிக்கு மருத்துவமனையில் வைத்து என்னை விசாரித்தார்கள். விசாரித்துவிட்டு சென்றுவிட்டார்கள் என்றால் சரிதான். என்னிடம் காவல் நிலையத்தில்வைத்து கையொப்பம் பெற்றார்களா என்றால் இல்லை, மருத்துவமனையில் வைத்து கையெழுத்து பெற்றார்கள். போலிசார் படித்து கான்பித்த பிறகு தான் நான் கையொப்பம் செய்தேன். மருத்துவமனையில் என்னை விசாரித்தபிறகு வேறு எங்கும் போலிசார் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். எனது தாயாரையும், எனது மனைவியையும் எப்போது விசாரித்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. நான் 3 நாட்கள் மருத்துவமனையில் சிகிச்சையிலிருந்தேன். சாட்சிகள் லட்சுமணன், சன்முகம், ரமேஷ் ஆகியோர்கள் உறவினர்கள் என்றால் சரியல்ல. ரமேஷ் மற்றும் சன்முகம் என்பவர்களின் வீடு எங்கள் வீட்டிலிருந்து சுமார் 300 மீட்டர் தொலைவு இருக்கும். என் தாயாரை எதிரி அசிங்கமாக பேசவில்லை என்றும், காந்தி மகன் ரஜினிக்கும், எதிரிக்கும் எந்த வித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. ரஜினி அவருடைய சொந்த நிலத்தில் மண் நிரவியதை எதிரி கேட்க வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயம் எதிரியால் ஏற்பட்டது இல்லை என்றும், நான் கீழே விழுந்து ஏற்படுத்திக்கொண்டேன் என்றால்சரியல்ல. எதிரி வித மிரட்டலும் விடவில்லை என்றால் சரியல்ல. எனக்கும், எதிரிக்கும் இருக்கும் நில சம்மந்தமான பிரச்சனை சரி செய்து கொள்வற்கான பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் புகாரில் சொல்லியுள்ள அனைத்து சங்கதிகளும் தவறானது என்றால் சரியல்ல. கீழே விழுந்த எனது பல்லை போலிசாரிடம் கொடுத்துள்ளேனா என்றால் கொடுத்துள்ளேன். மீண்டும் நீதிமன்றத்தில் கேட்கும்போது ஒப்படைக்க வேண்டும் என்று கூறி என்னிடமே ஒப்படைத்துவிட்டார்கள். எனது பல் விழவில்லை என்றும், அவ்வாறு விழுந்திருந்தால் போலிசார் அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பார்கள் என்றால் சரியல்ல.

Signature of Witness